செ.வெ.எண். 44/நவம்பர் தேதி : 20.11.2016

## தருமபுரி மாவட்டம்

**தருமபுரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று (20.11.2016) அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற 63-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 70 பயனாளிகளுக்கு ரூ. 35 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கான கேடயங்களையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.**







தருமபுரி மாவட்டத்தில் 63-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தருமபுரி மாவட்டத்தில் 63-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா-2016-ல் 532 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தவிர மீன்வளத் துறை, தொழில் வணிகத்துறை, சமூக நலத்துறை மற்றும் பட்டு வளர்ச்சி துறை போன்ற துறைகளிலும் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக குழுக்கள் மூலம் சங்கங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் தமிழக விவசாயிகளின் கடன் சுமையை நீக்கும் வண்ணம் அறிவித்த வேளாண் கடன் தள்ளுபடி திட்டம் 2016-ன்படி கூட்டுறவு நிறுவனங்களில் 31.03.2016ல் நிலுவையுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்றுள்ள குறுகிய கால பயிர் கடன்கள், நகையீட்டின் பேரில் வழங்கப்பட்ட விவசாய கடன்கள், மத்திய கால கடனாக மாற்றியமைக்கப்பட்ட குறுகிய கால கடன்கள், மத்திய கால வேளாண் கடன்கள் மற்றும் பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன்கள் ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டன. நமது மாவட்டத்தில் 27928 பயனாளிகளுக்கு ரூ. 139 கோடியே 63 இலட்சம் வேளாண் கடன் தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையின் மூலமாக ரூ. 3267 கோடியே 42 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அக்டோபர் 2016 முடிய 64318 பயனாளிகளுக்கு ரூ. 317 கோடியே 40 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தும் நோக்குடன் 4 சதவீத வட்டி விகிதத்தில் கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 20 கோடியே 46 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அக்டோபர் 2016 முடிய 2424 பயனாளிகளுக்கு ரூ. 7 கோடியே 30 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் நலனுக்கான இஸ்லாமியர்கள், கிருஸ்துவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் மற்றும் பார்சியர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் வியாபாரம் மற்றும் தொழில்கள் செய்ய கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 11 கோடியே 59 இலட்சம் கடனாகவும், நடப்பாண்டில் அக்டோபர் 2016 முடிய 52 பயனாளிகளுக்கு ரூ. 25 இலட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்திலுள்ள 131 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் 53400 மெ.டன் உரங்கள் ரூ. 74 கோடியே 80 இலட்சத்திற்கு விற்பனையும், நடப்பாண்டில் அக்டோபர் 2016 முடிய 6942 டன் உரங்கள் ரூ. 11 கோடியே 14 இலட்சத்திற்கு விற்பனையும் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விளைபொருள் விற்பனை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் விவசாய விளைப் பொருட்களான நிலக்கடலை, மஞ்சள், பருத்தி மற்றும் எள் ஆகியவை ரூ. 66 கோடியே 37 இலட்சத்திற்கும், விவசாயிகளுக்கு தேவையான தரமான விதைகள் ரூ. 52 கோடியே 45 இலட்சத்திற்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நமது மாவட்டத்தில் பொது சேவை மையங்கள் 125 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், அரூர் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் சித்தேரி மலைவாழ் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் மூலம் பொது சேவை மையங்கள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இச்சேவை மையங்கள் ரூ. 1 கோடியே 5 இலட்சம் சேவை கட்டணமாக பெறப்பட்டுள்ளது. நடப்பாண்டில் அக்டோபர் 2016 வரை ரூ. 10 இலட்சத்து 33 ஆயிரம் சேவை கட்டணமாக பெறப்பட்டுள்ளது.

விவசாயிகள் நலன் பேண திட்டங்கள் மூலமாக 24 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் துவக்கப்பட்டு, விவசாயிகளுக்கு டிராக்டர், பவர் டில்லர், டிரெய்லர், நெல் நடவு இயந்திரம், ஸ்பிரேயர், கட்டை வெட்டும் இயந்திரம், கதிர் அடிக்கும் இயந்திரம் மற்றும் களையெடுக்கும் கருவி போன்ற கருவிகள் குறைந்த வாடகையில் வழங்கப்படுகிறது. இச்சேவை மையங்கள் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 92 இலட்சத்து 27 ஆயிரம் சேவை கட்டணமாக பெறப்பட்டுள்ளது. மேலும் நவீன விவசாயம் செய்ய வேண்டி 4 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் மண் மற்றும் நீர்ப் பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டு அவைகள் மூலம் நீர் மற்றும் மண் பரிசோதனை செய்து விவசாயத்திற்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் சித்தேரி மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கம் கணினிமயமாக்கப்பட்டு அனைத்து சேவைகளும் விரைவாக அளிக்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமையக அலுவலக கிளையில் ATM வசதி செய்யப்பட்டு, செயல்பாட்டிற்கு வர உள்ளது. சேமிப்பு கிடங்கு வசதியில் கூட்டுறவு நிறுவனங்கள் தமிழக அரசு நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து (சுஜனுகு) 123 சங்கங்களுக்கு கிடங்குகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. 2016-17 ஆம் ஆண்டில் இக்கிடங்குகள் மூலம் விவசாயிகளுக்கு சரக்கீட்டு கடனாக ரூ. 9 கோடியே 74 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிட்லிங் மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டு வருகிறது.

2016-17-ம் ஆண்டில் 79 கூட்டுறவு நிறுவனங்களை ரூ. 1245 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும் எனவும், இம்மண்டலத்திலுள்ள பென்னாகரம், ஏ. பாப்பாரப்பட்டி, அரூர், கம்பைநல்லூர் மற்றும் பாலஜங்கமனஅள்ளி ஆகிய 5 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை நவீனமயமாக்க ரூ. 75.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு நவீனமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. 103 கூட்டுறவு நிறுவனங்களை ரூ. 2780 இலட்சம் மதிப்பீட்டில் சொந்த கட்டிடம் கட்டப்படும் எனவும், மேலும் இம்மண்டலத்திலுள்ள ஏ. ஜெட்டிஅள்ளி, கடமடை, ஜிட்டாண்டஅள்ளி மற்றும் ஆனூர் ஆகிய 4 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு சொந்த கட்டிடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் விதி எண். 110-ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின்படி ரூ. 80.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

கம்பைநல்லூர் மற்றும் கெலவள்ளி ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நகை பாதுகாப்பை உறுதி செய்ய உயர்தர பாதுகாப்பு பெட்டகங்கள் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. பின்னர் சித்தேரி, சிட்லிங் ஆகிய பெரும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் மலைவாழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிவறை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மலைவாழ் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் சிட்லிங் பகுதியில் புதியதாக மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம் 26.11.2014-ல் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் அரூர், தருமபுரி, பென்னாகரம் மற்றும் பாலக்கோடு ஆகிய இடங்களில் கூட்டுறவு மருந்து கடைகளும், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் காரிமங்கலம் பேரூராட்சிகளில் அம்மா மருந்தகங்களும் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மருந்து கடைகள் மூலம் தரமான அனைத்து வகையான கம்பெனி மருந்துகளும் 15 சதவீதம் தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் 445 முழுநேர நியாய விலைக்கடைகளும், 553 பகுதிநேர நியாய விலைக் கடைகளும், 09 மகளிர் நியாய விலைக் கடைகளும் என மொத்தம் 1007 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகிறது. இதில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 3,66,853 ஆகும். ஏழை எளியோருக்கு விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் நியாய விலைக்கடைகள் மூலம் கடந்த 5 ஆண்டுகளாக நாட்டிலேயே முதல் முறையாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணை போன்ற அத்தியாவசியப் பொருட்களும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் போன்ற பொருட்களும் மற்றும் ஊட்டி டீ தூள், அயோடின் கலந்த அரசு உப்பு ஆகிய பொருட்கள் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2014-15 ஆம் ஆண்டு 445 நியாய விலைக் கடைகளுக்கு அரசு மானியமாக ரூ. 367/- இலட்சம் அரசால் வழங்கப்பட்டது. தற்போது தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் நவம்பர் 1 முதல் தமிழகத்தில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதால் ஒரு நபருக்கு 5 கிலோ விலையில்லா அரிசி வீதம் ஒரு குடும்பத்தில் எத்தனை நபர் உள்ளனரோ அதற்கேற்றவாறு விலையில்லா அரிசி அளிக்கப்படுகிறது.

நமது மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் பொதுமக்கள் நீண்ட தூரம் சென்று பொருட்கள் வாங்குவதைத் தவிர்க்கும் விதமாக 13 முழு நேர நியாய விலைக் கடைகளும், 47 பகுதி நேர நியாய விலைக்கடைகளும் ஆக மொத்தம் 60 நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக தருமபுரி கூட்டுறவு நகர வங்கி வரை, 9 பயனாளிகளுக்கு சிறுவணிக கடனுதவி தொகையும், 8 பயனாளிகளுக்கு கூட்டுபொறுப்புக்குழு கடன்களும், 3 பயனாளிகளுக்கு ஆதாரக் கடன்களும், 1 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் கடனுதவியும், 25 பயனாளிகளுக்கு பண்ணைசார கடன் மற்றும் சிறுவியாபாரக்கடன்களும், 11 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவியும் மற்றும் வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டு திட்டங்கள் குறித்த ஒருங்கிணைந்த திட்ட விளக்க கையேட்டினை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வெளியிட்டு விழாப்பேருரையாற்றினார்.

இவ்விழாவில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பழனியப்பன், அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முருகன், தருமபுரி மண்டலம் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு. க. பாண்டியன், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் செல்வி. கி. ரேணுகா, தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு. பி. என்.ஏ. கேசவன், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத் தலைவர் திரு. சு. தென்னரசு, துணைத் தலைவர் திரு.எம்.கே. வேலுமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.